# *DEPOSITION OF WITNESS*
# IN THE COURT OF ADDITIONAL CHIEF JUDICIAL MAGISTRATE, THANJAVUR AT KUMBAKONAM

| | | |
|---|---|---|
| **MCOP No. 85/2023** | **நாள் – 19.11.2025** | **சாட்சி – ம.சா.1** |

*Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Act 44 of 1969).*

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.அருள்தாஸ் | தந்தை பெயர் | திரு.பழனிவேல் |

**2ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

காவல் துறையில் விபத்து குறித்து நான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான், என் தந்தை புகார் கொடுத்தார். விபத்து சமயத்தில் நான் இருசக்கர வாகனத்தில் சென்றேன் என்றால் சரிதான். நான் ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனம் யாருக்கு சொந்தம் என்றால் என்னுடைய அண்ணனுக்கு சொந்தமானதாகும். எதிரெதிரே வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். வலங்கைமான் திருக்கருகாவூர் வளைவு சாலையில் விபத்து நடந்தது என்றால் சரிதான். நான் ஓட்டிச் சென்ற வாகனத்தின் பதிவு எண். TN 68 H 7994 என்றால் சரிதான். அதன் மோட்டார் வாகன ஆய்வறிக்கை ம.சா.ஆ.2 என்றால் சரிதான். விபத்து சமயத்தில் எனக்கு ஓட்டுனர் உரிமம் இல்லை என்றால் சரிதான். தற்போது எனக்கு ஓட்டுனர் உரிமம் உள்ளதா என்றால் இல்லை. நான் ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனத்திற்கு காப்பீடு பாலிசி இருந்ததா என்றால் இருந்தது. நான் ஓட்டுனர் உரிமம் இல்லை என்பதற்காக அபராதம் செலுத்தினேன் என்றால் சரிதான். நான் ஓட்டிச் சென்ற வாகனத்திற்கான மோட்டார் வாகன ஆய்வறிக்கை ம.சா.ஆ.2 ல் ஓட்டுனர் உரிமம் இல்லை என்பதற்கும், காப்பீடு பாலிசி இல்லை என்பதற்கும்

ரூபாய்.7,000/— அபராதம் செலுத்தினேன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்தில் அடிப்பட்டவுடன் எந்த மருத்துவமனையில் நான் சேர்க்கப்பட்டேன் என்றால் கும்பகோணம் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, பின் தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துமனையில் அனுமதிக்கப்பட்டேன். கும்பகோணம் அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்ட விபத்து பதிவேடு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கும்பகோணம் அரசு மருத்துவமனையில் இருந்து தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துமனையில் சேர்க்கப்பட்டேன் என்றால் சரிதான். அதற்கான விபத்து பதிவேடு ம.சா.ஆ.4 என்றால் சரிதான். நான் இருசக்கர வாகனத்தை ஓட்டிச் சென்ற போது பின் இருக்கையில் யாராவது அமர்ந்திருந்தார்களா என்றால் நான் மட்டும் தான் ஓட்டிச் சென்றேன். விபத்து சம்பந்தமாக புலன் விசாரணை அதிகாரி மேற்கொண்ட மாதிரி வரைபடத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் நான் வாகனத்தை ஓட்டி வரும் போது, மழை பெய்து கொண்டிருந்தது. அந்த சமயத்தில் நான் தலைக்கவசமும், ரெயின் கோட்டும் போடவில்லை என்றால் தலைக்கவசம் மட்டும் அணிந்திருந்தேன், ரெயின் கோட்டு போடவில்லை. எனது தகப்பனார் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கும் போது, நான் தலைக்கவசம் அணிந்திருந்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ஸ்கேன் செய்ததாக ம.சா.ஆ. 8 ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மூளையில் எவ்வித பிரச்சனையும் இல்லை என்று ம.சா.ஆ.8ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்தில் எனக்கு முகத்தில் எதுவும் எலும்பு முறிவு ஏற்படவில்லை என்றால் சரிதான். நான் தலைக்கவசம் அணியவில்லை என்றாலும்,

வழக்கிற்காக தலைக்கவசம் அணிந்திருந்ததாக தவறாக சொல்கிறேன் என்றாலும், உண்மையிலேயே தலைக்கவசம் அணிந்திருந்தால் எனக்கு முகத்தில் காயம்பட்டிருக்க வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல. பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் நான் சிகிச்சை பெற்றேனா என்றால் சிகிச்சை பெற்றேன். தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவனையில் வழங்கிய விடுவிப்பு சான்றிலும், பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவனையில் வழங்கிய விடுவிப்பு சான்றிலும் Skid and fall என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் மழையில் வேகமாக தலைக்கவசம் அணியாமல் வளைவில் சென்று சரிக்கி கீழே விழுந்து விபத்தை ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல. விபத்திற்கு முழுக்காரணம் என்னுடைய கவனக்குறைவும், அஜாக்கிரதையும், அதிவேகம் என்றால் சரியல்ல. நான் அரசு மருத்துவமனையில் மட்டுமே சிகிச்சை மேற்கொண்டேன் என்றால் சரிதான். மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு வேலையோ, வருமானமோ எனக்கு இல்லை என்றால் சரியல்ல. மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு வாகன சேதத்திற்கு குறிப்பிட்டுள்ள தொகைக்கும், செல்போன் சேதம் அடைந்ததற்காக குறிப்பிட்டிருக்கும் தொகைக்கும் எவ்வித ஆவணங்களையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ம.சா.ஆ. 7 ஆவணம் வழக்கிற்காக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. விபத்தில் அடிப்பட்ட பிறகு ஊனச்சான்று வழங்க வேண்டும் என்பதற்காக எந்த மருத்துவமனைக்கு நான் சென்றேன் என்றால் தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உள்ள மருத்துவ குழுமத்திற்கு சென்றேன். மேற்கண்ட மருத்துவக்குழுமம் வழங்கிய இயலாமைக்கான சான்று நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்துள்ளேன். மருத்துவரின் ஆலோசனையின் பேரில் நான்

நடந்துக்கொள்ளாத காரணத்தினால் தான் எனக்கு ஊனத்தின் விழுக்காடு அதிகமாக கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு மிக அதிகம் என்றால் சரியல்ல. விபத்திற்கு முழுக்காரணம் எனது அஜாக்கிரதையும், கவனக்குறைவும், அதிவேகமும் காரணம் என்பதால் நான் 2ஆம் எதிர்மனுதாரருக்கு எதிராக இழப்பீடு கோர உரிமை இல்லை என்றால் சரியல்ல.

*Typed to my dictation in open Court, read over to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.*

G. MANIKANDARAJA
Digitally signed by G. MANIKANDARAJA
Date: 2025.11.19 17:41:52 +0530

*Additional Chief Judicial Magistrate,*
*Kumbakonam.*